# சிலம்பொலி

## சிறப்பு மலர்

**1975.**

**வட அல்வை இளங்கோ சனசமூக நிலையம்**




# ஐங்கரன் ஸ்ரோர்ஸ்

131, 5ம், குறுக்குத்தெரு,

கொழும்பு—11.

☎ தொலைபேசி: 34764.

★

**பலசரக்கு வகைகளும் — வெங்காயம் — மிளகாய்**

**மொத்தமாகவும், சில்லறையாகவும்**

**வாங்குபவர்கள்**

விற்பவர்கள் உள்ளூர் உற்பத்திப்

பொருட்களைச்

**சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.**

தெணியான்

வட அல்வை

## இளங்கோ சனசமூக நிலையம்
## முத்தமிழ் மன்றம்.

# சிறப்பு விழா மலர்

# சிலம்பொலி

விழா அமைப்புகள்:

- ★ புதிய கட்டிடத் திறப்பு விழா
- ★ 27வது ஆண்டு நிறைவு விழா
- ★ முத்தமிழ் விழா

நிலைய முன்றலரங்கு

ஆனித்திங்கள் 7-ந் திகதி சனிக்கிழமை 21-6-75 மாலை 6 மணி

அமைப்பில் அருமை !
தரத்தில் புதுமை !!
பாவிப்பில் பெருமை !!!

காலணி வகைகளுக்கு

# கோல் ஸ்டோர்ஸ்

புகழ்பெற்ற
சப்பாத்து வியாபாரிகள்

உரிமையாளர் :-
K. M. S. செல்லத்துரை
45, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான
சகலவிதமான
சப்பாத்துக்கள்
செருப்புக்களுக்கு

ஒருமுறை விஜயம்
செய்து பாருங்கள்.

நன்றி

# "யாழ்ப்பாணம் சூபலஸ்"

51, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ்

சகலவிதமான
ஆங்கில, ஆயுள்வேத
மருந்து வகைகளும்
கோவில் தேவைகளுக்குரிய
அபிடேக திரவிய
வகைகளும்

எம்மிடம் மலிவான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான வீதி, — பருத்தித்துறை.

# சரவணாஸ் ஆட்ஸ்

சகல விதமான
விளம்பர பலகைகள்,
உருவச் சிலைகள்,
அட்டைப்படங்கள்,
போன்ற
சித்திர வேலைப்பாடுகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்.

தெணியகம், — பொலிகண்டி.

உள்ளூராட்சி அலுவலகம்,
கச்சேரி – யாழ்ப்பாணம்.
16 - 6 - 75.

யாழ், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
**திரு. க. நல்லைநாதன் சி. ஏ. எஸ். அவர்களால்**
**வழங்கப்படும்**

# ஆசிச் செய்தி

கட்டைவேலி கிராமப் பிரதேசத்தில் மிகத் திறமையுடன் பல்லாண்டுகளாக இயங்கித் தங்கள் பிரதேச அபிவிருத்திக்காகவும், கலை, கல்வி, கலாச்சாரப் பொருளாதாரப் பண்பாட்டு வளர்ச்சிக்காகவும் அயராது உழைத்திடும் தங்கள் நிலையம், புதிய கட்டிடப் புகுமுக விழாவாகவும், முத்தமிழ் விழாவாகவும், மேலும் சேவை செய்வதற்கான ஐக்கிய விழாவாகவும், எடுக்கும் பெரு விழாவை முன்னிட்டு, வெளியிடப்படவிருக்கும் இம் மலருக்கு எனது ஆசிச்செய்தியினை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

தன்னலம் கருதாத துடிப்புள்ள இளைஞர்களை நிர்வாகிகளாகக் கொண்டியங்கும் தங்கள் நிலையம் பொதுமக்களுடைய அன்பு, உதவி, ஊக்கம், உற்சாகம், ஆர்வம்மிக்க ஒத்துழைப்பு ஆகியவற்றைப் பெற்று மேலும் பல்லாண்டுகள் சேவைசெய்து பயன் பல பெற வாழ்த்துகிறேன்.

க. நல்லைநாதன்,
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## க. துரைரத்தினம் பா. உ. பருத்தித்துறை

அவர்கள்

# வழங்கிய ஆசியுரை

வட அல்வை இளங்கோ சனசமூக நிலையம் கடந்த 27 வருடமாக மக்களுக்கு சிறந்த சேவைகளில் கல்வி, பொருளாதாரம், சமூக பணிகளைச் செய்து வருகின்றது.

மேலும் இந்நிலையம் ஒற்றுமையை வளர்த்து மக்கள் சக்தியைப் பயன்படுத்தி முன்னேற்றப் பாதையில் வீறுநடை போட இறைவனை இறைஞ்சுகிறேன்.

**க. துரைரத்தினம்**
பா. உ.
பருத்தித்துறை.

---

## ஸ்ரீ அப்பாள் சனசமூக நிலையத் தலைவர்
## திரு. ரி. கே. வெள்ளிமலை அவர்கள்

# வழங்கிய ஆசியுரை

கால நிலையுணர்ந்து மக்கள் நிலையறிந்து விழாக்களைக் கொண்டாட வேண்டும். அப்பொழுதுதான் விழாக்களின் பெருமைகளை மக்கள் உணர்வார்கள். இந் நெறியில் நின்று உழைக்கும் வட-அல்வை இளங்கோ சனசமூக நிலையத்தினரின் ''முத்தமிழ் மன்றப் படிப்பகம்'' தனது 27-வது ஆண்டு நிறைவு விழாவையும், முத்தமிழ் விழாவையும் நடாத்துதற்கு முன் வந்திருப்பது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். கற்கண்டுக் குவியலை கண்ணைப் பறிக்கும் வெள்ளித் தட்டிலே கொட்டி வரிசை வழங்குவதைப்போல ''இளங்கோ'' நிலையத்தார் முத்தமிழ் விழாவை மக்களுக்கு வழங்குகின்றார்கள். எளிமையையும், எழிலையும் ஒன்றாக்கி இனிமையை அதனுடன் இழைத்து மக்களுக்குத் தருவதில் வல்ல இந்நிலையத்தாரின் சேவைகள் வளர்வதாக.

புதியதோர் சமத்துவ சமுதாயத்தை உருவாக்கத் துடிக்கின்ற இந் நிலையத்தார் காந்தி வழி நின்று புனிதமான பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழ் பேசும் மக்களின் கல்வி, கலை, கலாச்சாரம் வளரவும், ஒற்றுமைப்பட்டு வாழவும் கடமையாற்றி வரும் இவர்களின் நிர்வாகத்திறனைப் பாராட்டுகிறேன். இவ்விழா சிறக்கவும், நிலையம் உறுதியுடன் செயலாற்றவும், சிறப்புமலர் செழுமை பெறவும் இறைவனைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

வணக்கம்

**ரி. கே. வெள்ளிமலை**
சமரபாகு.

# சீர்மணக்கும் இளங்கோ மன்றம்
# சிறந்து வாழி!

அல்வையிலே கடலுண்டு; காட்சி யுண்டே!
அலைவாய் அல்வாயான தென்போர் கூற்றுண்(டு)
அல்வையிலே கூடலால வாயின் பேரை
'அல்வாயா யீற்றெ'னச்சொல் ஆய்வு முண்டெம்
அல்வையிலே பெரும்புலவர் கூட்ட முண்டெம்
அல்வையிலே சமாதிஅரு ளம்ப லர்க்குண்(டு)
அல்வையிலே புகழ்பெற்றோர் பலரு முண்டே;
அன்னவர்க்குள் சட்டத்தால் உயர்ந்தார் ஜீ ஜீ.

அல்வையிலே கோட்டையுண்டா? உண்டே! எங்கள்
அல்வையிலே இருந்ததுண்டு துலுக்கன் கோட்டை!
அல்வையிலே அதுகூறும் இடமும் உண்டெம்
அல்வையிலே கண்ணகிக்குக் கோயில் உண்டே;
அல்வையிலே முத்துமாரி அம்பா ளோடு,
ஆலயங்கள் விநாயகற்க னேகம் உண்டே;
அல்வையிலே பனந்தோப்பு காடாய்த் தோன்றும்;
ஆங்காங்கும் வான்பார்க்கும் பூமி உண்டு.

அல்வையூர்ப் புகழுக்கோர் மன்றம் உண்டா?
ஆம்; உண்டு; அம்மன்றம் இளங்கோ மன்றம்
சொல்லாண்ட இளங்கோவின் காவி யம்போல்
துரிதமுடன் புதுமைசெய்த கலைகள் உண்டு;
பல்லாண்டாய் விளையாட்டுத் துறையில் ஓங்கி,
பார்மணக்கும் கலைவிழாக்கள் கண்டதுண்டு;
நல்லாண்டு விழாக்கள்கண் டமன்ற மின்று,
நனிசிறக்கத் திறப்புவிழாப் பூணு மன்றே.

பாட்டினிலே புரட்சிசெய்த புலவோர்க் கெல்லாம்
பாவரசன் இளங்கோவே முதல்வன் என்பேன்!
பாட்டதனுல் காவியத்தில் புரட்சி செய்தான்!
பைந்தமிழில் மாற்றறத்தை ஆக்கி வைத்தான்!
கூட்டமாகப் பின்னுளில் தோன்றி விட்ட
குமுறுகின்ற கவிஞர்க்கோ வழிவ குத்தான்!
ஏட்டகத்தில் சிலம்புக்குள் இளங்கோ செய்த
எண்ணரிய புதுமைகளை என்னென் பேன்யான்!

கண்ணகியைக் காவியத்தில் தலைவி யாக்கிக்
காரிகையர் பெருமைதனை விண்ணில் வைத்தான்!
மண்ணகத்து மன்னரையே தலைவ ராக்கி
மாகவிதை பாடுகின்ற மரபு தன்னைத்
திண்ணமுற வென்றெடுத்த பெருமை தன்னைத்
தீரனிவன்—இளந்துறவி—முதலிற் பெற்றான்;
விண்ணவர்கள் தொழுதேத்தும் கண்ண கிக்கு
வித்தகத்தால் கவிசமைத்துப் புகழே பெற்றான்.


"இன்னதற்காய் இன்னநூலை எழுது வேன்யான்"
எனஎழுதும் பாணியினை இளங்கோ தந்தான்
மன்னர்க்குள் இருக்காது துறவு பூண்ட,
மாசில்லா இளந்துறவி யாக வாழ்ந்தும்,
பன்னியதன் காவியத்தில் இயற்கை வாழ்த்தே
பாடுகின்றான்; பரமனையோ பாடவில்லை!
என்னப்பா! இலக்கியத்தில் இளங்கோ செய்த
எத்தனங்கள் புதுமைகட்கோர் எல்லை இல்லை!

வீரர்க்குக் கல்லெடுக்கும் மரபே உண்டு!
விண்வணங்கும் கண்ணகிக்கோ சிலையெ டுத்தார்!
சேரத்து இளங்கோவன், பத்தி னிக்குச்
சிலையெடுக்கும் இலக்கணத்தைப் பதித்து வைத்தான்!
ஆரப்பா இந்தஇளங் கோவாம் அண்ணல்?
அப்பப்பா அவன்கவிதை நெஞ்சை அள்ளும்!
பாரப்பா சிலப்பதிகா ரத்தை யுள்ளே
பண்புள்ள பாத்திரங்கள் நம்மை நோக்கும்!

சீர்மணக்கும் இளங்கோவாம் செம்மல் வாழி!
செம்மைசால் அவர்பெயரைத் தாங்கும் மன்றம்
பார்மணக்க என்றென்றும் வாழி! நல்ல
பண்புள்ள துறவியவர் உள்ளம் போலே,
ஊர்மணக்க நடக்கின்ற விழாச்சி றக்க!
உந்துகின்ற சிந்தனையைச் சிலம்பொ லிக்க!
கார்மணக்கும் மேகமென்ன வந்த மக்கள்
கலைமணக்கக் கூடிநிற்கும் கவினும் வாழி!

ஆக்கம் : வித்வான், ம. முருகேசன்

# சமர்ப்பணம்



தோற்றம்: 17–4–1955. மறைவு : 26–5–1975.

வட அல்வை இளங்கோ சனசமூக நிலையம் தனது 27வது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடும் இவ்வேளையில், அதன் பணியினை எமது உள்ளங்களில் பதியவைக்கும் பொருட்டு, இச்சிறப்பு மலரினை வெளியிடுகின்றது. ''சிலம்பொலி'' என்னும் சிறப்பு மலர், முத்தமிழ் விழா மலராகவும், புதிய கட்டிடத் திறப்பு விழா மலராகவும் வெளிவர வகை செய்கின்றது.

மேலும், எங்கள் நிலைய சஞ்சிகையான ''சிலம்பொலி''யின் துணை ஆசிரியரும் மன்ற உறுப்பினருமான அன்புச் செல்வன் பாலசண்முகம், ஜெயபாலன் அவர்கள் 26-5-1975ல் நடைபெற்ற புகையிரத விபத்தில் அகால மரணமடைந்தமையால், அன்னாரின் சேவைக் குறிப்புகள் சிலவற்றை நினைவு கூருவோமாக.

- ஆண்டு தோறும் நடைபெற்றுவரும் நிலைய வைபவங்களில் முன்னின்று கடமை புரிவதில் தீரர்.
- புதிய கட்டிடத்தை நிறைவேற்றி விழாக் காண்பதில் அயராது உழைத்துச் செயல்பட்டார்.
- முத்தமிழ் விழாச் சிறப்புடன் நிறைவேறத் திட்டங்களை வகுத்ததுடன், சில பொறுப்புக்களையும் தாமே மேற்கொண்டார்.
- தன்னிளம் தோழர்களின் மத்தியில் ஏற்படும் கருத்து வேற்றுமைகளுக்கு சமாதானம் கூறி எல்லோரையும் தன்பால் ஈர்த்துக்கொள்வார்.
- எமது கிராமத்து இளைஞர்கள் மத்தியில் தனக்கெனத் தனியான இடத்தை வகுத்து, நம் எல்லோரையும் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்டுவிட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அவர்தம் பாதங்களில்
இம்மலரினைச் சமர்ப்பணம் செய்வதில் பெருமிதமடைகிறோம்.

**மலர் வெளியீட்டுக் குழு.**

# கௌரவிக்கிறோம்

**வட அல்வை இளங்கோ சனசமூக நிலையத்தினராகிய நாம், நமது நோக்கங்கள் பலவற்றில் நிலையத்திற்கு அரும்பணி யாற்றியவர்களை கௌரவிப்பதில் பெருமையடைகிறோம்.**

* நமது ஸ்தாபகர்:

திரு. க. மு. முருகேசு அவர்கள்
(இளைப்பாறிய தலைமையாசிரியர்)

* நமது புதிய கட்டிடத்திற்கான அத்திவாரக் கல்லை அன்புடன் நாட்டியவர்

திரு க. கதிரவேல் அவர்கள்
(பவளம்)

* நமது நிலையம் கட்டுவதற்கான காணியை மனமுவந்து அன்பளிப்புச் செய்தவர்,

திருமதி க. சாரதாமணி அவர்கள்
தனது அன்புச் செல்வன் க. ஜெயஸ்ரீராசா அவர்களின்
ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

# செயலாளர் கூறுகிறார்!

**நா ஜெயராஜசிங்கம்**

எமது இளங்கோ சனசமூக நிலைய முத்தமிழ் மன்றப் படிப்பகம் தனது இருபத்தேழாவது நிறைவு ஆண்டைப் பெருவிழாவாகக் கொண்டாடுகிறது. இவ்விழா அதன் புதிய — அழகிய கட்டிடத் திறப்புவிழாவாக அமைந்துள்ளமை அதன் சிறப்பிற்கோர் எடுத்துக்காட்டு,

நீண்ட காலமாக வசதியான — பாதுகாப்பான ஒரு கட்டிடத்திற்காக நமது கிராமத்து முதியோரும் இளைஞரும் அதிவிருப்போடு உழைத்ததன் பயனைக் கண்டு இன்று பிரமிப்படைவது மட்டுமின்றிப் பெருமிதமுமடைகின்றோம். வெறும் மன அறிவோடு அல்லாமல் உடல் உழைப்பைப் பெரிதாகக் கொண்டு எத்தனை எத்தனையோ கஷ்டங்களை வென்றுகொண்டோம்.

முச்சங்கம் அமைத்து முத்தமிழ் வளர்த்த மூவேந்தர் வழியே 'தாலாட்டும் நம் தமிழ் காக்க' முத்தமிழ் விழாக் கொண்டாடுகின்றோம். தமிழ் காத்து தமிழ் வளர்த்து வரும் எம் நிலையம் இன்று தனக்கென்று ஒரு தனி மலரை வெளியிட்டு தன்னிகரற்றுத் தனித்துவமாகத் திகழ்கிறது. புதிய தலைமுறையினரிடையே இலக்கிய ஆர்வத்தைத் தூண்டும் முகமாகப் பிறந்த சிலம்பொலி கையெழுத்துப் பிரதியாக மட்டும் இருந்துவிடாமல் அச்சுருவில் இன்று மலராக மலர்ந்து இதழாக விரிந்துள்ளது.

ஐக்கியத்தை வளர்ப்பதற்கு அரும் பணிகள் பல செய்த நமது நிலையம் பாலர் பாடசாலை, சமய போதனைகள் போன்ற அரிய சேவைகளை நமக்குச் செய்யவுள்ளமை பூரிப்பையளிக்கிறது.



# செந்தமிட்சாதி

இமயமலை உச்சியினில் எங்கள்கொடி நட்டோம்
இழித்துரைத்த ஆரியர்க்கும் ஏற்றஉதை விட்டோம்
நமதுபுகழ் சாவகத்தில் புட்பகத்_ல் கண்டோம்
ஞாலமெலாம் கப்பல்விட்டு நல்லபுகழ் கொண்டோம்
எமதுகலை உயர்வாலே இகம்எல்லாம் வென்றோம்
இலக்கியத்தின் மாண்பாலே அறியாமை கொன்றோம்
சமராடும் வலிமிக்க தமிழ்மக்கள் நாங்கள்
தடுமாறி நிலைமாறித் தாழ்வுற்று விட்டோம்


கயிலாய மலையினையும் கையாலே தூக்கும்
கரங்கொண்ட ராவணனார் வழிவந்த மக்கள்
செயலாற்ற முடியாத சிறியோர்க ளாகி
திசைமாறித் திரிகின்ற சிறுவாழ்வு கொண்டோம்
வயலுள்ள பயிருள்ள வளமுள்ள மக்கள்
வகையற்று மெலிவுற்று வலியற்று விட்டோம்
பயமற்ற மூவேந்தர் வழிவந்த தமிழர்
பழியுற்று வழியுற்றுப் பயங்கொள்ளு கின்றோம்.

தமிழ்மக்கள் நாங்கள் தமிழ்ப்பற்றே யில்லை
தாழ்வுற்றுப் போதற்கு வேறென்ன வேண்டும்
தமிழ்மக்கள் நாங்கள் தமிழ்மூச்சே இல்லை
தடுமாறி நிலைமாற வேறென்ன வேண்டும்
தமிழ்மக்கள் நாங்கள் தமிழ்ப்பண்பே இல்லை
தலைதாழ நிலைதாழ வேறென்ன வேண்டும்
தமிழ்மக்கள் நாங்கள் தன்மானம் இல்லை
தமிழற்கு வேறென்ன இழிவொன்று வேண்டும்.

முன்னாளில் தன்பிள்ளை தனைத்தேரி னாலே
முடிமன்னன் கொன்றானும் நீதியைக் காக்க
இந்நாளில் நீதியை நாம்கொல்லு கின்றோம்
இல்லாத பொல்லாத கோள்மூட்டு கின்றோம்
அந்நாளில் நெடுஞ்செழியன் அறங்காக்க மாண்டான்
அவனோடு கூடவே தேவியுஞ் சென்றாள்
சொன்னாலும் திருந்தாத தமிழ்ச்சாதி மக்கள்
சுடுகாடு போனாலும் திருந்தார்கள் போலும்

வருங்காலம் பற்றியோர் எண்ணமே யில்லை
வரலாறு பற்றியோர் சிந்தையும் இல்லை
இருக்கின்ற வரைக்கும்யாம் இருந்திட்டுப் போவோம்
என்கின்ற எண்ணமே யன்றிவே றில்லை
சுருங்கவே கூறில் சுரண்டியே னும்நாம்
சுகத்தோடு வாழ்ந்தாலே போதுமென் இன்றார்
தெருவோரம் திரிகின்ற நாய்கூட மேலாம்
செந்தமிட் சாதியின் நிலைமெத்தக் கீழாம்.

கவிஞர் காரை, செ. சுந்தரம்பிள்ளை



## நமது ஸ்தாபகர்

# திரு. க. மு. முருகேசு அவர்கள்

(இளைப்பாறிய தலைமையாசிரியர்)

தொகுத்தவர்: வே. வேதநாயகம், வட அல்வை

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும் வள்ளுவன் வாய் மொழிக்கிணங்க தமது வாழ்வை எமது ஸ்தாபகர் திரு. க. மு. முருகேசு அவர்கள் அமைத்தார்கள். நமது சமூகத்தில் கல்வி கற்பவர்கள் அருகியிருந்த காலத்தில், கல்வி கற்கவேண்டும் என்ற ஆர்வத்தால் உந்தப்பட்டு, பல இன்னல்களுக்கிடையே கல்விகற்றுத் தேர்ச்சியடைந்தார்கள். அதன் பயனாக எமது கிராமத்தில் எமது சமூகத்தில் முதலாசிரியனாகி தமது சேவையை தேவரையாளி சைவ வித்தியாசாலையில் ஆரம்பித்தார்கள். அவர்தம் சேவையினால் நமது சமூகத்திற்கு, ஒளி விளக்காகவும், கலங்கரை விளக்கமாகவும் திகழ்ந்தார்கள். கிராமப்புறத்தில் உள்ள சிறுவர்களைப் படிக்கத் தூண்டியதுடன் பல உதவிகளையும் செய்தார்.

மேலும் அவருடைய சமூகத் தொண்டுகளை நாம் அளவிட முடியாதாயினும் இயன்ற வரை சுருக்கமாவேனும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. கிராமத்தில் நடைபெறும் பொதுத் தொண்டுகளில் அவரில்லாத இடமே இல்லை மக்களின் அன்றாட வாழ்வில் காணப்பட்ட ஏற்ற – தாழ்வு நிலையினைப் போக்க வேண்டி அல்வாய் வடக்கு சமூகப் புனருத்தாரண ஐக்கிய சங்கத்தை ஸ்தாபித்தார்கள் இதன் மூலம் சில கட்டுப்பாட்டுகளைச் சமூகத்துக்கு விதித்தும், பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்தும் நோக்கத்திற்காகவும், 'பணச்சடங்கு முறை'யினை ஏற்படுத்தினார்கள்.

சமூக ஐக்கியத்தின் பலம் கொண்டும், பல சமூகப் பெரியார்களின் வேண்டுதலாலும் 1944ம் ஆண்டு கட்டைவேலி கிராமசபையின் தேர்தலில் போட்டியிட்டார். சமூகக் கொடுமைகள் நிறைந்த அந்தக் காலத்தில் சிறுபான்மைத் தமிழர் என்று சொல்லப்படும் இனத்தின் முதல் வெற்றி வீரனாகத் திகழ்ந்தார். ஒன்பது ஆண்டுகள் கிராமச்சபையிலிருந்து பணிகள் பல புரிந்தார்.

இன்று இளங்கோ சனசமூக நிலையம் என்ற பெயரினைத் தாங்கி நிற்கும் இக்கட்டிடம், 1936-ம் ஆண்டில் விக்கினேஸ்வர வாசிகசாலை யென்ற பெயருடன் எமது ஆசிரியர் அவர்களால் ஸ்தாபிக்கப் பட்டதாகும். எமதூரில் அன்பால் அருள்பாலிக்கும் அரசடி விநாயகர் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்து ஒரு பரிபாலன சபையையும் ஸ்தாபித்தார். இன்று இவ்வாலயத்தின் பாரிய திருப்பணி வேலைகள் இன்னும் முடிவுறாமல் எம் கண் முன் காட்சியளிக்கின்றது. இதன் பாதுகாவலராகவும் இருந்து செயல் படுகின்றார். அதுமட்டுமல்லாது, நமது சமூகத்தில் வேரூன்றிக் கிடந்த, கோவில்களில் பலியிடும் முறையை அகற்றி அக்கோவில்களில் எல்லாம் சைவ சமய ஆசாரப்படி தரிசனம் செய்யும் பழக்கத்தினையும் கொண்டு வந்தார்.

பொருளாதாரக் குறைவு, வேலைவாய்ப்பின்மை போன்ற இன்னோரன்ன துறைகளில் அபிவிருத்தி காணும் வகையில் நெசவு நிலையம், பன்ன வேலை நிலையம், என்பவற்றை

ஸ்தாபித்தார். அதுமட்டுமா? நமது மக்கள் பூரண சுதந்திரத்துடன் தங்கள் உணவுப் பண்டங்களைப் பெறும் வகையில், அம்பிகா ஐக்கிய பண்டசாலையையும், ஸ்தாபித்தார்கள். இதுவே மறு உருவமாக இன்று ஸ்ரீலங்கா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமெனத் திகழ்கின்றது

அல்வையூர் கவிஞர் மு செல்லையா அவர்கள், தேவரையாளி சைவவித்தியாசாலையில் தலைமையாசிரியராயிருந்து, கருத்து வேற்றுமையால் தனது பதவியை இழந்திருந்த காலம், நமது கிராமத்து பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியையும் கவிஞரின் பதவி இழப்பையும் மையமாக வைத்து பலரின் உதவியுடன் எங்கள் கலைக் கோயிலாம் ஸ்ரீ லங்கா வித்தியாசாலையை ஸ்தாபித்தார்கள். இன்னும் எத்தனையோ குறிப்பிடக்கூடிய அளப்பரிய சமூகப்பணிகளை எமது கிராமத்துக்கு செய்துள்ளார்கள்.

மேலும் கிராமத்துக்கு வெளியே, வடமராட்சிப்பகுதியில்எமதுசமூகத்தின் நிலையினை ஸ்திரப்படுத்தும் வகையில் பல பெரியார்களுடன் சேர்ந்து வடமராட்சி சமூக சேவா சங்கத்தினை ஸ்தாபித்துச் செயல்பட்டார்கள் இத்தாபனம் பரந்துபட்ட சேவையினை மக்களுக்குச் செய்யவேண்டிய காரணத்தால் அகில இலங்கை ரீதியில் விஸ்தரிக்கப்பட்ட இயக்கமாகியது. இதுவே இன்று சிறுபான்மைத் தமிழர் மகா சபையென அழைக்கப்படுகிறது. மகாசபையில் முக்கிய பதவிகளை வகித்து வந்த வேளையில் கருத்து வேறுபாடுகள் தோன்றின அதனால் ஆரம்ப ஸ்தாபகர்களில் பலருடன் இவரும் வெளியேறி, ''மக்கள் முன்னேற்ற மன்றம் என்ற ஸ்தாபனத்தை உருவாக்கினார்கள். காந்தீயத்தில் நம்பிக்கை கொண்டிருந்த இவர் காந்திஜீ கழகம் காந்திய சேவா சங்கம் போன்ற தாபனங்களில் உறுப்பினராக இருந்து வருகிறார்.

கலை ஆர்வம் மிக்க எமது ஸ்தாபகருக்கு நாடகக்கலையில் தனியான தன்மையுண்டு பல போட்டி நாடகங்களை மேடையேற்றி வெற்றி கண்டவராவர். ''சகுந்தலை'' நாடகம் அவரின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாகும். ஈழத்தின் பிரபல நடிகரான நடிகமணி, வி. வி வைரமுத்து இவரின் திறமையின் வழி வந்தவராகும்.

இன்னும் புத்தூர் ஸ்ரீ விஷ்ணு 'வித்தியாலயம், புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் என்பனவும் இவரின் ஸ்தாபனங்களென குறிப்பிட்டாக வேண்டும். விஷ்ணு வித்தியாலயத்தை ஸ்தாபித்த காரணத்தால் அங்கேயே தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டு சேவைகள் பல செய்தார்கள் அது மட்டுமல்லாது ஒய்வு பெற்ற காலத்தில் தனக்கெனத் தனியான தொழில் வாய்ப்பையும் (விவசாயம்) பெற்று சீரும் சிறப்புடனும், ஆவரங்கால் சிவன் கோவிலுக்கு பாகமாய் வாழ்ந்து வருகின்றார் இத்தனை சேவைகளையும் செய்வதற்கு, அவரின், துணிந்த மனப்பண்பும், அன்னாரின் இலட்சத்தரசியின் ஒத்துழைப்புமே காரணமாம் ஆகவே எங்கள ஸ்தாபகர் திரு க மு. முருகேசு அவர்களையும், அவரது குடும்பத்தாரையும், நீடுழி வாழ்கவென வாழ்த்தி நன்றி செலுத்துகின்றோம்.

வணக்கம்.

# செயற்குழு

| | |
|---|---|
| காப்பாளர் : | திரு. க. மு. முருகேசு அவர்கள் (இளைப்பாறிய தலைமையாசிரியர்) |
| தலைவர் : | திரு. சி. தங்கத்துரை |
| இணைச்செயலாளர்கள்: | திரு. நா. ஜெயராசசிங்கம்<br>திரு. வே. வேதநாயகம் |
| பொருளாளர்: | திரு. வே. பாலசிங்கம் |
| துணைத்தலைவர்: | திரு. மு. ஜெயச்சந்திரன் |
| நிர்வாகக்குழு : | திரு. க. பாலகிருஷ்ணன்<br>திரு. மு. முத்துச்சாமி<br>திரு. செ. கணேசன், ஆசிரியர்<br>டாக்டர்; பொ. மகாலிங்கம்<br>திரு வே. பாலசண்முகம்<br>திரு. மா. கந்தசாமி |
| விளையாட்டுத்துறை: | திரு. வே. சிவயோகன்<br>செல்வன் க மனோகரன் |
| நாடகத்துறை: | திரு. க. பேரம்பலம்<br>செல்வன் வை. இராசரத்தினம் |
| படிப்பகப் பொறுப்பு: | செல்வன் க. குணதர்மபாலன்<br>செல்வன் மா. அன்பழகன் |
| பத்திரிகைக்குழு : | செல்வன் சி. மகேந்திரன், ஆசிரியர்<br>,, சி. தர்மநாதன், துணை ஆசிரியர்<br>,, செ. மதியழகன் ,,<br>,, மு. நவயுவன் ,,<br>,, மு. அனுதரட்சகன் ,, |
| கலைக்குழு: | செல்வன் வே. செல்வயோகன்<br>செல்வன் சி. மணிகலாதன் |
| பொது இயக்குநர் குழு: | திரு. ம. முருகேசன், ஆசிரியர்<br>திரு. வே. மகேசன், ஆசிரியர்<br>திரு. கோ. சுப்பிரமணியம்<br>திரு. க. சிவயோகநாதன்<br>திரு. மு. சரவணமுத்து |
| வரவேற்புக்குழு: | திரு. மு. பாலச்சந்திரன்<br>திரு. க. இராசலிங்கம்<br>செல்வன் கோ. தயாபரன்<br>செல்வன் க. மணிவாசகன் |

# வரலாற்றுப் பார்வையில்....

எங்கள் சனசமூக நிலையம் வெளியிடும் சிறப்பு மலரில் எங்கள் நிலையம் பிறந்து வளர்ந்த வரலாற்றை வாசகர்கள் பார்வைக்கு வரலாருகத் தருவதில் பெருமை அடைகிறேம்.

அல்வையூர் என்றவுடன் அகத்தில் தோன்றும் எண்ணம் இதுதான் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த தென்மதுரை அதாவது கூடல் – ஆலவாய் மனக்கண்ணில் தோன்றுகிறதல்லவா. ஒரு காலத்தில் ஆலவாய் என்னும் பெயராலே வழங்கப்பெற்ற ஊர் பெயர் அல்வாய் என மருவி வழங்குகிறது என்பர். கூடலம்பதியில் நடைபெற்ற விழாக்கள் போலும் விழாக்களுக்கு நமதூரில் குறைவில்லை என்றே கூற வேண்டும்.

நமது சமூகத்தவர்களால் தாபிக்கப் பெற்றனவும், பரிபாலிக்கப்பட்டு வருவனவுமாகிய சைவாலயங்கள் வெகு காலத்துக்கு முன்பிருந்தே இவ்வூரிலிருந்து வருகின்றன. இது வட அல்வையைப் பொறுத்தவரையில் அயற் கிராமத்தவர்களாலும் பாராட்டப் பட்டு வரும் பெருமைக்குரிய விடயமாகும்.

வட அல்வைப் பகுதியை அணி செய்யும், நமது நிலையம் குருக்கட்டு, குமுதெணி, மாரும்புலம் என்னும் பிள்ளையார் ஆலயங்களுக்கு மத்தியில், நமதூரின் கலைக்கோயிலாக விளங்கும் ஸ்ரீ லங்கா வித்தியாசாலைக்கு அருகில், நாவலடி–திக்கம் பிரதான வீதியில் வடக்கு, தெற்கு, கிழக்கு ஆகிய முத்திக்கு வீதிகளும் வந்து சங்கமிக்குமிடத்தில் அமைந்திருப்பது இதன் சிறப்பம்சங்களில் ஒன்ருகும்.

குன்றின் மேலிட்ட தீபம் போல் காட்சியளிக்கும் அறிவாலயமாகிய எங்கள் நிலையம், கூடல்போல் காணப்படுவதாய பொதுமக்கள் வந்து கூடுமிடத்தில் அமைந்திருப்பதும் மதுரம் போல் தித்திக்கும் தமிழைக் கூடி ஆராய்ந்த இடமாகிய கூடல் ஆலவாயின் பெயரைப் பெற்றிருப்பதும் கூடல் ஆலவாயிலிருந்து அரசாண்ட கொற்றம் மிக்க பாண்டியனின் செங்கோலின் சிறப்பு; ஊழின் உரம்; கற்பின் மகிமை ஆகியவற்றைக் கருப்பொருளாய் வைத்து காப்பியம் படைத்த இளங்கோவின் பெயரைப் பெற்றிருப்பதும், கவின் கலைமன்றத்துக்கு முத்தமிழ் மன்றம் எனவும், படிப்பகத்திற்கு முத்தமிழ் மன்றப் படிப்பகம் எனவும், பத்திரிகைக்கு சிலம்பொலி எனவும் பெயர் சூட்டியிருப்பதும் இந்நிலையத்துக்குரிய சிறப்பம்சங்களாகும்.

நிலையத்தின் வரலாறு 1936 ல் ஆரம்பமாகியது. முப்பத்தொன்பது ஆண்டுகளை நிறைவாக்கி, நாற்பது வயதில் கால் எடுத்து வைத்திருக்கும் நிலையத்தின் ஆரம்பக் கட்டிடம் 15x11 அடி நீள அகலம் கொண்ட ஒரு கொட்கை யாகும். 1936 தைத் திங்கள் வட அல்வை அரசடி விநாயகர் ஆலயவீதியில் 'விக்கினேஸ்வர வாசிகசாலை' என்னும் பெயருடன் ஒரு நூல் நிலையத்தை நமது ஊர் பெரியார் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் திரு. க. மு. முருகேசு அவர்கள் ஊரவர்களின் உதவி ஒத்துழைப்புக்களுடன் ஆரம்பித்தார். திறப்பு விழாவுக்கு வடமராட்சிப் பகுதியிலுள்ள எமது சமூகத்தைச் சேர்ந்த பெரியார்கள் பலர் (கட்டுரை விரிவஞ்சி பெயர்கள் தரப்படவில்லை) சமுகமளித்து, நல்லுரை வழங்கி நூல்களும் உபசரித்தனர் என அறிகிறேம்.

ஆரம்பத்தில் 'விக்கினேஸ்வர வாசிகசாலை' என்ற பெயருடன் தாபிக்கப்பட்ட இந்நிலையம் இடையில் ''அல்

வாய் வடக்கு சனசமூக சேவா சங்கம், விக்னேஸ்வர — வாசிகசாலை'' எனவும் நேரு நிலையம்—விக்கினேஸ்வர — வாசிக சாலை யெனவும், சமூகப் புனருத்தா ரண ஐக்கிய சங்க வாசிகசாலை யென வும், காலத்துக்குக் காலம் ஏற்பட்ட நிர்வாக மாற்றத்தால் பல பெயர்க ளைப் பெற்று வளர்ந்தது.

1949—திலிருந்து நமது இளைஞர் கள் விளையாட்டுப் போட்டியும் கலை விழாவும், தொடர்ந்து நடத்தத் தலைப் பட்டனர். இந் நிகழ்ச்சிகள் நடக்கத் தொடங்கி இருபத்தேழு ஆண்டுகள் நிறைவாகிவிட்டன. அதனைற்றான் நாம் இப்பொழுது நிலையத்தின் இருபத்தே ழாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகின்றோம்.

நிலையத்தின் நாற்பது வருட வர லாற்றில் இலக்கிய விழா, சமூக முன் னேற்ற விழா, கலைவிழா, ஆகிய விழாக் கள், விவேகானந்த சபையாரின் சமய பாடவகுப்புக்கள், தீபாவளி விளையாட் டுப் போட்டி, மாதர் முன்னேற்றச் சங் கம், மாணவர் மன்றம், சிரமதானப் பணிகள் போன்றபல நல்ல இயக்கங்கள் தோன்றியுள்ளன. காலத்துக்குக் காலம் இவ்வியக்கங்கள் நடந்தபோதெல்லாம் ஊர்மக்கள் தாராளமாக நிதி உதவி வாரி வழங்கியமை பாராட்டற்குரிய செயலாகும்.

1970—ம் ஆண்டு தொடக்கம் எங் கள் சனசமூக நிலைய வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டதென்றே கூற வேண்டும். ஏனெனில் ஊக்கமும் விடா முயற்சியுமுடைய, இன்றைய நிர்வாகி களும், இளைஞர்களும் உசாத் துணை யாய் நின்ற சிலரும், எங்கள் கண்முன் காட்சியளிக்கும் புதிய கட்டிடத்தை அமைத்து, இப்பொழுது திறப்பு விழாக் காண வகை செய்தார்கள். இக்கட்டி டத்தை அமைப்பதில் நிதியும் சரீர உத வியும் புரிந்தவர்களோடு, காணி அன் பளிப்புச் செய்தவர்களையும் எப்படிப் பாராட்டினாலும் தகும்.

மேலும் வட அல்வைப் பகுதி நெசவு— நிலையம்—பன்னவேலை நிலையம்—சமூகப் புனருத்தாரண ஐக்கிய சங்கம்—அம் பிகா ஐக்கிய பண்டக சாலைக் கிளை— காந்திஜீ கழகம் — ஸ்ரீலங்கா வித்தியா சாலை ஸ்ரீலங்கா பலநோக்குக் கூட்டுற வுச் சங்கம் — ஆலயதிருப்பணிச் சபை ஆகிய இயக்கங்களுக்கு அவ்வப்போது களம் அமைத்து வந்திருக்கிறது. இப் பகுதி மக்களிடத்திலிருந்த சமூக அந் தஸ்தும், துணிபும், தியாக சிந்தனையும் தான் இத்தகைய பல இயக்கங்களை வென்றெடுக்கக் கூடிய நிலையை உரு வாக்கியது என்பதில் பெருமைப் படு கின்றோம்.

எங்கள் இயக்கங்கள் ஒவ்வொன் றுக்கும் ஒவ்வோர் கதையுண்டு, இவ்வி யக்களுக்கு வாய்கள் இருக்குமானால், நிச்சயமாக அவைகள் தத்தம் கதைக ளைக் கூறாமல் இருக்கவே மாட்டா. இவ் வியக்கங்களுக்கு முன்னோடிகள் யார்? எப்படி ஆரம்பித்தார்கள்? எப்படி நிறைவேற்றினார்கள்? என்ன என்ன பாடுகள் பட்டார்கள் என்பவற்றுக் கெல்லாம்ஏராளமான விடைகள் வரும். இப்படியான முன்னோடிகளை — ஆரம்ப கர்த்தாக்களை— எங்கள் மலரில் வாழ்த்த வேண்டியது எங்கள் கடமையாகின்றது. இந்த வகையில் எங்கள் சனசமூக நிலை யத்தின் ஆரம்ப கர்த்தாவும், தேவை யான போது ஆலோசனைகளைக் கூறுபவ ராகவுமிருக்கும், ஓய்வு பெற்ற தலைமை யாசிரியர் திரு. க. மு. முருகேசு அவர் களுக்கு எமது நிலையத்தின் சார்பிலும், மலர் வெளியீட்டுக் குழு சார்பிலும், வாழ்த்துக்களைக் கூறி வணங்கி நிற் கின்றோம்,

வாழ்க இளங்கோ நாமம்!

வளர்க இளங்கோ சனசமூக நிலையம் !!

**விழாக் குழுவினர்.**

# ஐக்கிய தீபம்

ஐக்கிய மென்னும் தீபம்
அவனியில் அன்பால் ஏற்றிப்
பக்குவ மாக அதனைப்
பாதுகாத் தொளிரச் செய்தால்
திக்கெலாம் பரந்து சூழும்
தீவினை யெல்லாம் ஒழிந்தே
மக்களின் வாழ்வு தன்னில்
மகிழ்ச்சியே பொங்கும் நாளும்.

நாட்டினில் மக்க ளுக்குள்
நாடியே வந்து சேரும்
போட்டிகள் பொருமை யென்னும்
பெருமிருள் தன்னை யகற்றக்
கூடியே மக்கள் ஏற்றும்
ஐக்கிய தீபம் நாளும்
ஈடில்லா ஒளி பரப்பி
எங்குமே வீச வேண்டும்.

சாதிகள் மதங்கள் பலவும்
செகமதில் இருந்த போதும்
சோதியாய் விளங்கும் இறைவன்
யாவர்க்கும் ஒன்றே யாகும்
பேதங்கள் பேசி நாட்டில்
வேற்றுமை காட்டல் விடுத்தே
சோதியாய் ஐக்கிய யத்தைச்
சுடர்விடச் செய்தல் வேண்டும்.

ஏழைகள் பணக்கா ரர்கள்
என்றுமே பேத மின்றி
எழில் மிகுந்த நாட்டில்
யாவரும் ஒன்றே என்ற
வளமிகு ஐக்கி யத்தை
வளர்த்துமே ஓங்கச் செய்ய
உளமகிழ்ந் தொன்ருய் நின்று
உறுதிசெய் துய்வோம் நாமே.

சி. க. பாலசுப்பிரமணியம்
தோட்டம்
அல்வாய்.

# பூம்புகாரைக் கடல் விழுங்கியது ஏன்?

பண்டைத்தமிழகத்திலே காவிரிப்பூம் பட்டணம் என்னும் பூம்புகாரிலே, இந்திர விழா என்று ஒரு பெருவிழா-மக்கள் விழா கொண்டாடப்பட்டு வந்தது. இவ்விழா சித்திரா பௌர்ணமி முதல், வைகாசி விசாகம் வரை 28 நாட்கள் கொண்டாடப்பட்டதாக சிலப்பதிகாரம் கூறுகிறது. இதே காலத்தில்தான் இலங்கையின் பல பாகங்களிலும் கண்ணகி வணக்கம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளாக மறக்கப்பட்டு, விடப்பட்ட இந்திர விழாவை இவ்வருடம் இதே காலத்தில் காவிரிப்பூம் பட்டணத்து மக்கள் மீண்டும் நடத்த முன்வந்தனர். அந்தவிழாவில் சொற்பெருக்காற்றிய சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் பூம்புகாரைக் கடல் ஏன் விழுங்கியது என்பதை நன்கு விளக்கினார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் ''விண்ணவர் கோமான்'' எனப்படும் இந்திரனுக்கு இதே பூம்புகாரில் மிகச் சிறந்த முறையில் விழா நடந்ததாக சிலப்பதிகார காப்பியத்தால் அறிகிறோம். இந்திரன் என்பான் அரசர் குலத்தின் முதல்வன் என்பது ஒரு ஆராய்ச்சி, தேவர்களின் தலைவன் என்கிறது புராணம். இதனால் தேவேந்திரன் என்ற பெயரும் அவனுக்கு உண்டு.

இந்திரனை முதல் தெய்யமாக முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபட்டு வாழும் ஒரு தனி மதத்தினர் பாரதத்தில் இருந்தனர் என்றும் அறிகிறோம். அந்த மதத்திற்கு ''ஐந்திரம்'' என்று பெயர். அந்த மதத்திற்குரிய ஐந்திர வியாகரணம் என்று ஒரு நூல் இருந்ததாகவும் அதனை இந்திரனே செய்தானென்றும், சிலப்பதிகாரத்திலே ஒரு செய்தி உண்டு.

### மருதநிலத் தெய்வம்

தமிழுக்கே உரிய தனி இலக்கணமாகிய தொல்காப்பியத்துள் நால் வகை நிலங்களுக்கும், தெய்வங்கள் கூறியுள்ளார் — தொல்காப்பியர். அதில் குறிஞ்சி நிலத்துக்கு முருகனையும், நெய்தல் நிலத்துக்கு வருணனையும், முல்லை நிலத்துக்கு திருமாலையும், தெய்வங்களாகக் குறிப்பிட்ட தொல்காப்பியர், அந்த மூன்றிலும் வளமுடைய கூடுதலான மக்கள் வாழ்கின்ற மருத நிலத்துக்கு இந்திரனைத் தெய்வமாகக் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் நடைபெற்ற இந்திர விழா ஐந்திர மத உணர்ச்சியுடனோ இந்திரனே முதல்-தெய்வம்-முழு முதற் கடவுள் என்ற நினைப்புடனோ நடந்ததாகக் கொள்வதற்கில்லை.

மருதநிலத் தலைவன் என்ற நினைப்புடன்தான் புகார்நகரத்து மக்கள் இந்திர் விழாவைக் கொண்டாடி இருக்க வேண்டும். ஆம், புகார்நகரத்தைத் தவிர அதனைத் தலை நகராகக் கொண்டிருந்த சோழ மண்டலத்துக் கிராமங்களிலே, இந்திரவிழா நடைபெற்றதாக சிலப்பதிகாரத்திலும் செய்தி இல்லை.

### வச்சிர கோட்டம்

இந்திரனுடைய பேராயுதமான வச்சிராயுதத்தைக் கொண்ட கோயில்

ஒன்று புகாரில் இருந்ததாகவும், அறிகிறோம். அதனை வச்சிர கோட்டம் என்கிறார் இளங்கோவடிகள்.

சிலப்பதிகாரத்தில் புகாரில் சித்திரா பௌர்ணமியில் தொடங்கி வைகாசி பௌர்ணமி வரை 28 நாட்கள் தொடர்ந்து இந்திர விழா நடைபெற்றதாக அறிகிறோம். அந்த விழாவை சோழ மன்னனே முன்னின்று நடத்தியிருக்கிறான். இந்திர விழா ஊர்வலம் அவன் தலைமையிற்றான் பவனி வருகிறது. அமைச்சர்கள், தளபதிகள், பல்வேறு சமயங்களின் தலைவர்கள் செல்வச் சிறப்புடைய வணிகப் பெருமக்கள் கலைத்துறையில் தலைமை பெற்று விளங்கிய கலைஞர்கள் ஆகிய அனைவரும் இந்திர விழாவில் கலந்து கொள்ளுகின்றனர். சமணப் பள்ளி, புத்தர் மடம் ஆகியவற்றில் இந்திர விழாவையொட்டி அற உபதேசங்கள் வழங்கப்படுகின்றன 28 நாட்களும், விழாக் காட்சிகளை நகரத்தின் அழகுக்கு அழகு செய்யும் அலங்காரங்களைக் காண வெள்ளம் போல் தமிழர் கூட்டம் இரவிலும், பகலிலும், புகார் நகரத்து வீதியிலே நடைபோடுகின்றது. கலையரசனும், கலையரசியுமாகிய மாதவியும், கோவலனும் கூட வீதிகளில் நடமாடி, விழாக்கோலம் காணுகின்றனர்.

இப்படிச் சிலப்பதிகாரக் காப்பியத்தில், இந்திரவிழா ஊரெடுத்த காதையிலே இந்திரவிழாவின் சிறப்பை நம் அகக் கண்களுக்குக் காட்சிப்படுத்துகிறார் இளங்கோ. இந்த விழா எப்போது யாரல் தோற்றுவிக்கப்பட்டது. என்பதை நாம் இயற்றிய மணிமேகலைக் காப்பியத்தில் ஒரு கதையாகவே கூறுகின்றார். ஆசிரியர் கூலவாணிகன் சாத்தனார்.

இந்திரவிழா நடந்த அந்தக் காலத்து பூம்புகாரை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அந்த நாளில் தமிழகம் தனி அரசாக இருந்தது. பிறிதொரு அரசுக்குக் கட்டுப்பட்ட மண்டப அரசாகவோ, குறுமன்னன் ஆட்சியாகவோ இல்லை.

### "துறைமுக அரசி"

அன்றைய பூம்புகார் ஆசிய நாட்டின் 'துறைமுக அரசி' எனும் சிறப்புப் பெயர் பெற்ற துறைமுகப் பட்டினமாக விளங்கியது. 18 மொழிகளைப் பேசும் அயல் நாட்டு வணிகர்கள் தத்தம் நாட்டின் விலைமதிப்பற்ற பண்டங்களைக் கொண்டுவந்து அவற்றைக் கொடுத்து மாற்றாக தமிழ் நாட்டின் பண்டங்களைப் பெற்றுச் செல்லக் காத்துக் கிடக்கின்றனர்.

புகார் நகரத்துக் கடற்கரையோரத்தில் அந்த அயல் நாட்டார் அமைத்துக் கொண்ட மாளிகைகள் ஏழு அடுக்குக் கொண்டனவாக வானோங்கி நின்றனவாம்.

அந்நாளைய புகார் நகரத்து மக்கள் சுவர்க்க லோகத்திலும் கிட்டாத சுக போகங்களை அனுபவித்தனராம். சர்வ தேச துறைமுக நகரமாகப் புகார் விளங்கியதால் உலகத்துச் செல்வமெல்லாம் இங்கே குவிந்திருந்தாலும் அவற்றைச் சோழ மண்டல அளவிலேனும் பட்டி தொட்டிகளுக்கெல்லாம் கொண்டு சென்று மக்களுக்குப் பகிர்ந்தளிக்க துரிதப் போக்கு வரத்துச் சாதனங்கள் அந்நாளில் இருக்கவில்லை. அதனால் பூம்புகாரில் திரண்டு குவிந்திருந்த செல்வத்தை அந்நகரத்து மக்களே அனுபவித்தனர்.

### இந்திரவிழா மக்கள் விழா

சிலப்பதிகாரத்திலோ, பட்டினப் பாலையிலோ பூம்புகார் எனப்படும் காவிரிப் பூம்பட்டினத்தின் வளத்தை வர்ணிப்பதைப் படித்துவிட்டுச் சோழநாடு முழுவதுமே சொர்க்கலோகமாக

இருந்ததென்று நம்பிவிடுகின்றனர் சிலர், அது பிழையாகும். அந்நாளிலும் கிராமங்களில் வளங்குறைந்திருந்தது. சில பருவங்களிலே சில குடும்பங்களிலே வறுமையும் தாண்டவமாடியது. இதனை மறந்துவிடவேண்டாம்.

பொதுவாக சிலப்பதிகாரத்தில் வர்ணிக்கப்படும் இந்திர விழாவானது, ஒரு அரசியல் விழாவாக புகார் நகரத்திலுள்ள மக்கள் அனைவருமே கலந்து கொள்ளத்தக்க மக்கள் விழாவாக நடந்தது என்று சொல்லலாம்.

### புகழ் சூழ்ந்த பூம்புகார்

இன்றைய பூம்புகார் பொட்டல் காடாகக் காட்சியளிக்கிறது. சுற்றுப்புறப் பிரதேசத்திலுள்ள ஊர்களிலிருந்து இந்த விழாவுக்கு மக்கள் வருவதற்குக்கூட போக்குவரத்துச் சாதனங்களில்லை. பாதையோ பயங்கரமான பள்ளங்களையும், வளைவுகளையும் கொண்டுள்ளது. இந்த மாவட்டத்தின் அரசியலிலே எவ்வளவோ கோணல்கள் உண்டு என்பதைப் பாதையில் உள்ள கோணல்களே காட்டுகின்றன. அன்றைய புகாரை வர்ணித்த இளங்கோவடிகள் இமயமலையும், பொதியமலையும் எப்படி இருக்கும் இடத்தை விட்டுப் பெயராமல் நிலை பெற்றுள்ளனவோ அதுபோல பதி எழு அறியாத பழங்குடிகளைக் கொண்டது என்கின்றார்.

### கடல் விழுங்கியது

புகழை வேலியாகக் கொண்டிருந்த அந்த புகார்பதி இன்று எங்கே? கடற்கரை யோரத்திலே நிலைகளைக்கொண்ட கட்டிடங்கள் வரிசையாக நின்றிருந்த, அழகிய வீதிகள் எங்கே? பொருள்களைக் கப்பலில் ஏற்றுவதாலும், கப்பலிலிருந்து இறக்குவதாலும், துறைமுகப் பிரதேசம் முழுவதும் எதிரொலிக்கும் படியாக இரைச்சல் இருந்ததாக இளங்கோ கூறினரே அந்த ஒலி மிக்க துறைமுகம் எங்கே? அரண்மனையைக் கொண்ட பட்டினப் பாக்கம் எங்கே? நாளங்காடியும், அல்லங்காடியும் இருந்த மருவூர்ப் பாக்கமும் எங்கே? எல்லாவற்றையும் கடல் விழுங்கி விட்டதாம்.

ஒரு தனி மனிதனின் வாழ்விலோ ஒரு குடும்பத்தின் வாழ்விலோ, அளவுக்கு அதிகமாகச் செல்வம் கிடைத்து விட்டால் அவனுடைய அல்லது அந்தக் குடும்பத்தினுடைய, ஒழுக்கம் குலைந்துவிடும் என்பது வாழ்க்கை அனுபவம்.

### ஒழுக்கம் சரிந்தது

செல்வச் செழிப்புடைய நாடுகள் சிலவற்றிலே, தற்கொலைசெய்து கொள்வோரின் எண்ணிக்கை அதிகமாம், ஒழுக்கக் கேடுகள் மலிந்துள்ளனவாம், புகழால் அமைந்த பண்புடைப் புகாரிலும்,ஒழுக்கம் சரிந்தது போலும், அதனால்தான்.

> அருந்திறல் அரசர்
> முறைசெயின் அல்லது
> பெரும் பெயர் பெண்டிற்கு
> கற்புச் சிறவாது.

என்னும் உண்மையை ஆர்புனை சென்னி அரசனுக்குக் கண்ணகிதேவி அறிவித்தாள் என்கிறார் இளங்கோ.

### தெய்வந் தந்த தண்டனை

''ஆர்புனை சென்னி அரசன்'' என்பது அந்நாளைய சோழ மன்னனைக் குறிப்பதாகும். ஆம் பத்தினியிடமிருந்து அவர்களுடைய கணவர்களைப் பிரிக்கப் பரத்தையர்கள் நிறைந்திருந்தனர் பழைய புகாரிலே.

காளையர்களானோர் கடமையை மறந்து காதல் கூத்தடிக்கும் வகையில் கலைவெறி வளர்ந்திருந்தது பண்புடைப் புகாரிலே, பாடுபடாமலே பசியாற உண்

ணுமளவுக்குச் செல்வம் குவிந்திருந்தது பழைய புகார்ப் பகுதியிலே. அதனால் கற்பரசி கண்ணகி வாழ்விழந்தாள். அந்தப் பாவத்திற்குத் தெய்வம் தந்த தண்டனையாகக் கடல் சீறி, புகார் பட்டினத்தை விழுங்கியது. அப்படி அழிந்துபோன ஒரு பட்டினத்தின் எஞ்சியுள்ள பகுதியிலே மறைந்துபோன இந்திர விழாவைத் திரும்பவும் கொண்டாடும், இந்த நன்நாளில் நாம் சில பாடங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

## தெய்வம் மன்னிக்காது

ஒழுக்கம் கெட்ட காளையரை அவர்களுக்கு வாழ்க்கைப்பட்ட கன்னியர் மன்னிக்கலாம் ஆனால் தெய்வம் மன்னிக்காது. ஒழுக்கத்திலிருந்து வழுவி விட்ட ஊரையோ, நாட்டையோ, அரசன் தண்டிக்கலாம். அவனும் தவறிவிட்டால், அந்த ஊரையோ நாட்டையோ, தெய்வம் தண்டிக்கும் கடல் பொங்கி எழுந்து விழுங்கிவிடும். இந்தச் செய்திகளைச் சிலப்பதிகாரத்தின் வாயிலாக நமக்குத் தந்து நம்மை எல்லாம் எச்சரித்திருக்கிறார் இளங்கோவடிகள்.

புகழால் அமைந்த புகாரை கடல் விழுங்கியதைக் கேட்ட பின்னரும், எஞ்சியிருக்கும் தமிழகத்தையேனும் காப்பாற்றும் கடமை நமக்குண்டு. என்று நாம் எண்ணவேண்டாமா?

## எல்லாம் அழிவிலே

ஒரு கோவலன் மனைவிக்கு தான் ஆற்றவேண்டிய கடமையிலிருந்து தவறினான். தனக்கு வாழ்க்கைப்பட்ட பாவத்திற்காக காலமெல்லாம் கண்ணகியை அழவைத்தான். அந்தத் தவறுக்குத் தண்டனையாக காதலி மாதவியைப் பிரிந்தான். மண்மகளறியாத வண்ணச் சீரடி படைத்த கண்ணகி வாழ்விழந்தாள். அவளைக் கோவலனுக்கு வாழ்க்கைப் படுத்திய குற்றத்திற்காக கோவலனின் தந்தை துன்பத்தை முகத்தில் தேக்கி துறவு கொண்டான். தாய் உயிர் துறந்தாள்.

அப்படியே கண்ணகியின் தந்தை துறவு பூண்டார். அவளுடைய தாய் தானாகவே உயிர் துறந்தாள். வழித்துணை வந்த கவுந்தியடிகள் கோவலன் கொலையுண்டதையும், கண்ணகிதேவி வாழ்விழந்ததையும், கேட்டு உண்ணா விரதமிருந்து உயிர்விட்டாள். கண்ணகிக்கு அடைக்கலம் தந்த இடைக்குல மாதரி அடைக்கலப் பொருளைக் காக்கத் தவறியதற்காக வருந்தித் தீக்குளித்து மாண்டாள்.

இவ்வாறு வர்த்தக வளம் கொழித்து சீருடனும், சிறப்புடனும் விளங்கிய பூம்புகார் கடலுக்கு இரையாகி அழிந்தொழிந்தது. அங்கு வாழ்ந்த மக்களும், வாழ் விழந்து ஒவ்வொருவராக மாண்டு மடிந்தனர். எல்லாமே அழிவில் முடிவுற்றன. ஒழுக்கம் குன்றி, அறம் பிறழ்ந்ததால் ஏற்பட்ட தெய்வ தண்டனை இதுவாகும்.



உங்களுக்குத் தேவையான
சகல மோட்டார்
உதிரிப்பாகங்களையும்
நிதான விலையில்
பெற்றுக்கொள்ள

**புஸ்பா அன் கோ**
281/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

எங்களிடம் தற்காலத்துக்கேற்ற
புதுவித ரகங்களில்
ஆண், பெண், குழந்தைகள்
அணியும்
பாட்டா, டி. எஸ். ஐ.
இலாஸ்ரோ
மற்றும் உள்ளூர் தயாரிப்புகளான
செருப்பு சப்பாத்து
வகைகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்

**பிரகாஸ் ஸ்ரோர்ஸ்**
31, 33, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ சிறுவர் முதல்
★ ஆடவர்
★ அணங்குகள் வரை
அணிவதற்கேற்ற
பாத அணிகளுக்கு



**நிர்மலாஸ்**
142, மலே வீதி, — கொழும்பு 2.

சகலவிதமான
பழவகைகளுக்கும்
பலசரக்கு
வகைகளுக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்

**எம். நாகலிங்கம்**
5 A, பழைய மார்க்கட்,
யாழ்ப்பாணம்.

# குழந்தை வளர்ப்பில் தாய்ப்பாலின் அவசியம்

டாக்டர் பொன். மகாலிங்கம், வட அல்வை,
(M. H. H. Madras Homio)

குழந்தையின் நல விருத்தி முற்று முழுதாக சுகாதாரச் சுற்றுடலிலேயே தங்கிஉள்ளது ஒரு தாயானவள் மிகவும் அன்புடன் சீராட்டி, தாலாட்டி, பாலூட்டி வளர்க்கிறுள், அந்தக்குழந்தை நடமாடும் வரை தாய் மூலமே தனது தேவைகளைப் பூர்த்திசெய்கிறது. தாயும் அதற்குச் செய்யும் சேவையில் பெருமிதமும் இன்பமும், அடைகிறுள் குழந்தையின் முக்கியமான உணவுகளில் தாய்ப்பால் வகிக்கும் இடத்தையும் அது எவ்வளவுக்கு நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்பதை ஆராய்வாம்,

சிலதாய்மார்கள் குழந்தைகளுக்கு பாலூட்டும் புட்டியை உபயோகித்து பால்மா வகைகளை குழந்தைகளுக்குக் கொடுத்து பணத்தையும் விரயம் செய்து, குழந்தைகளையும் நோய்க்கு ஆளாக்குகிறுர்கள் அனைத்துலகிலும் அன்னையர் தங்கள் குழந்தைகளுக்கு மிகச்சிறந்த பராமரிப்பையே விரும்புவர். தாய்ப்பாலே மிகச்சிறந்த உணவு என்று எல்லோருக்குமே தெரியாமலிருப்பதுதான் துர்ப்பாக்கியமாகும். இயற்கை அன்னை தாய்ப்பாலே குழந்தை சீராக வளர்ந்துவர ஏற்ற உணவாக அதை உருவாக்கி இருக்கிறுள். என்னதான் இருந்தாலும் பசுவின்பால் குழந்தைகளுக்கு ஒரு ஊட்டச்சத்துள்ள கிராக்கியான உணவுதான்.

பால்மா உற்பத்தியாளர்கள் கிருமிகளை அழித்தும் ஊட்டப்பொருட்களை சேர்த்தும் மாட்டுப் பாலுக்கு மனிதப் பாலின் தன்மையை கொடுக்க முயல்வது உண்மையே. ஆனுல் எவ்வளவுதான் மாற்றம் செய்தாலும் அது மாற்றுணவாகத்தான் முடிகிறது. பல சத்துக்களை ஒருமைப் படுத்தி தாய்ப்பாலின் தன்மையை அதற்குக் கொடுத்தாலும் தாய்ப்பால் மாதிரி அதை சீரணித்துக் கொள்ளமுடியாது. எனவே குழந்தை நன்ருக வளருவதற்கு தாய்ப் பாலை விட வேறென்றும் இல்லை எனலாம்,

சென்ற சிலகாலங்களில் வளர்ச்சியுற்றநாடுகளில் படித்த பெண்கள் கூட பசுவின் பாலே இரண்டாவது தரம் என்று உணர்ந்துகொண்டார்கள். அமெரிக்கா, பிரிட்டன், ஏனைய ஐரோப்பிய் நாடுகளிலும் கூட, பெண்கள் தம் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்கும் பழக்கத்திற்குத் திரும்பி விட்டார்கள்.

தாய்ப்பால் முழுமையாக சீரணிக்கப்பட்டு கிரகிக்கப்படுவதுடன், தாயுடலில் உள்ள சிலநோய் எதிர்ப்பு அணுக்களையும் குழந்தை உடலுக்கு மாற்றுகிறது என்பதை வைத்திய நிபுணர்கள் உறுதிப்படுத்துகிறுர்கள். இதனுல் நோய் தோற்றும் வாய்ப்புக் குறைகிறது. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு வயிற்றுப் போக்கும், வாந்தியும், வேறு வயிற்றுக் கோளாறும் வருவது மிகவும் குறைவு.

தாய்ப்பால் குழந்தைகளுக்குக் கொடுக்காத பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் அதிகம் வருவதாக புள்ளி விபரம் காட்டுகிறது. ஆனுல் மார்பகப் புற்றுநோய்க்கு வேறு காரணங்களும் உண்டு.

வளர்ச்சியுற்ற நாடுகளில் நல்ல குடிநீர் வசதிகளும் குழந்தை உணவை பவுத்திரப்படுத்தி வைக்க குளிர்சாதனப்பெட்டி முதலியனவும் உண்டு. தாய்மாரும் அங்கே பழுத்த விஷயம் தெரிந்தவர்களாக இருப்பதால் பால் டப்பாவில் எழுதியிருக்கும் விதிகளைப் புரிந்துகொண்டு பால்வகைகளை தயாரித்து புட்டிமூலம் குழந்தைகளுக்குப் பாலூட்டுவார்கள். இத்தகைய நிலையிலாவது புட்டி உபயோகிப்பது பாதகமில்லையென்று கூறலாம். ஆனால் வளர்ச்சியற்ற வசதி குறைந்த நாடுகளில் இந்த வசதிகள் யாவும் கிடையாது. மக்களில் 80 சத விகிதம் பேர் வசிக்கும் கிராமங்களில் குழந்தை உணவைப் பாதுகாத்து வைப்பதற்கு நல்ல இடம்கூடக் கிடையாது. எங்கேயாவது மூலைமுடுக்குகளில் சொருகி வைப்பார்கள். நல்ல குடிநீர் வேண்டுமென்றாலும் நெடுந்தூரம் சென்று நடந்து கொண்டுவரவேண்டிய நிலை. தாய்மாருக்கு எழுத்தறிவு இல்லாதிருந்தாலும் பால் டப்பாக்களில்உள்ள விதிகளைப் படிக்கமுடியாமல் கண்டபடி எல்லாம் பால் பா தயாரித்துக் கொடுப்பதால் குழந்தை நோயாளியாகவே இருக்கும். இப்படிப்பட்ட பால் வகைகளைக் குடிக்கும் குழந்தைகளுக்கு வயிற்றுளைச்சல் வாந்திபேதி உடல் நீர் வற்றல் திரும்பத் திரும்ப வருவதும் வியப்பில்லை. மேலும் அதிகமான பெண்கள் தாய்ப்பால் கொடுக்கும் வழக்கத்தை விடுவதற்குப் பல காரணங்கள் உண்டு. உத்தியோகம் பார்த்தல், உடல் அமைப்பு, அழகு, பால் கொடுப்பதால் குறைவடையும் என்ற தப்பான எண்ணமும் பெண்களுக்கு ஏற்படுகின்றது.

பெண்களின் மார்பகம் குழந்தைகளுக்குப் பால் கொடுப்பதற்கான சாதனம் என்ற நினைவை மறந்து வெறும் இனக் கவர்ச்சிச் சின்னமாகும் காலம் வந்துவிடும். இந்தப் பேராபத்தைத் தடுப்பதற்கு உலக நாடுகளும் ஸ்தாபனங்களும் உண்மையை வெளிப்படுத்தி இடைவிடாது பெரும் பிரசாரம் செய்யவேண்டும், தாய்ப்பாலே தரமான குழந்தை உணவு என்று இடைவிடாமல் போதிக்கவேண்டும்.

தனது குழந்தைக்குச் சிறந்ததை விரும்பாத தாய் உலகில் எங்கும் உண்டா. நோயை எதிர்க்கும் நல்ல சக்தி தாய்ப்பாலினுல் குழந்தைக்குக் கிடைக்கிறது என்றும் பெரியவர்களாக வளர்ந்து மகிழ்வுடன் வாழும் வாய்ப்பும் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு அதிகமாக உள்ளது என்பதை தாயானவள் புரிந்துகொண்டால் அதுவே போதும்.

# விஜிதா மோட்டார் வேக்ஸ்

★ நம்பிக்கைக்கும்

★ நாணயத்திற்கும்

★ உத்தரவாதமுள்ள தாபனம்

குறித்த வேலையை குறித்தகாலத்தில் செய்து கொடுப்பவர்கள்
ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்.

உரிமையாளர்கள்:— கே. சிவம், கே. இராசரத்தினம்
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, — கரவெட்டி.

வகை வகையான
புடவைகளுக்கும்,
அழகு சாதனப்
பொருட்களுக்கும்

இன்றே
விஜயம் செய்யுங்கள்

மாலா ஸ்ரோர்ஸ்
159, மலே வீதி,
கொழும்பு—2.

சவ்பாயர்
ரேடியோ ரெக்னிக்
என்னும் பெயர் கொண்ட
எமது தாபனம்
"வானொலி"
என்னும் புதிய பெயர் தாங்கி
ஸ்ரான்லி வீதிக்கு,
(வெலிங்டன் படமாளிகை சந்தி)
வெகுவிரைவில் மாற்றப்படவுள்ளது
என்பதை மகிழ்வுடன்
தெரிவிக்கின்றோம்.

84, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# இறைவனும் வழிபாட்டுக் கோட்பாடுகளும்

சி. தங்கத்துரை, அல்வாய்.

மனிதன் மனிதனுக உயர்ந்த இலட்சியங்களுடன் வாழ சமயம் இன்றியமையாதது. சமயம் மனிதனுக்கும், அவன் வாழும் உலகையும் சிருஷ்டித்த கடவுளுக்குமுள்ள தொடர்பையும் விளக்குகின்றது. இத்தகைய சிறப்புப் பொருந்திய சர்வ வல்லமையுமுடைய கடவுளை வழிபடும் முறைகளையும் அவனை அறிவதற்கும் அடைவதற்கும் உரிய வழிகளையும் அடங்கிய தத்துவங்களைக் கூறுவது சமயமாகும். மனிதனது வாழ்க்கையை உயர்த்தி அவனது சிந்தனையிலும் செயலிலும் தெய்வீக மணம் கமழும் வகை செய்து, அவனைத் தெய்வத் தன்மை அடையச் செய்வது சமயமே. எனவே சமயம் மனித வாழ்வுக்கு எத்தகையது என்பது விளங்குகின்றது. சுயநலமற்ற சேவையும் அன்புள்ள வாழ்வும் சமயநெறிக்கு ஆதாரமானவை.

ஆதியில் நாகரிக வளர்ச்சிக்கும் சுகாதாரப் பாதுகாப்புக்கும் சமயம் துணைநின்றது. முன்னோர்கள் ''அவனன்றி ஓர் அணுவும் அசையாது'' என்று இயற்கையோடியைந்த வாழ்வை நடத்தினர். ஆனல் இன்றைய மனிதன் செயற்கரிய செய்கின்ருன். அணுக்குண்டு கால மனிதன் விஞ்ஞான விருத்தியில் ஆணவம் கொண்டவன் - சந்திரனை வலம் வருபவன் என்றெல்லாம் பேசிச் சமயத்தை வரட்டு வேதாந்தம் என்றும் குருட்டு நம்பிக்கை என்றும் நாத்திகம் பேசுகின்ருன். இவையெல்லாம் அறியாமையே.

மனிதன் விஞ்ஞான உலகில் சஞ்சரிக்கலாம். எல்லாவற்றுக்கும் மூலாதாரமானது எது? மூலாதாரமான பஞ்ச பூதங்களை யார் படைத்தார். என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டு போனுல் மாலுமி இல்லாத மரக்கலம் போல் தோன்றுமல்லவா? எனவே இறைவன் இல்லாத உலகம் இருக்கவே முடியாது. ஆகவே மனிதனின் ஒழுக்கத்திற்கும் பண்பாட்டு வாழ்வுக்கும் மதம் அடிப்படையானதாகின்றது.

இனி, சமயம் என்ருல் என்ன என்பதனை நோக்குவாம்; ஒரு மனிதனைப் பார்த்து ஒரு நல்ல காரியத்தைச் செய்யும்படி கேட்டால் அவன் எனக்கு சமயம் இல்லை என்கின்ருன். இக்காரியத்தை செய்வானுனல் அவன் சமயம் அறிந்தவனுகின்ருன். இங்கே சமயம் என்பது நேரம் என்னும் பொருள் தந்தது. இச்சமயம் என்ற சொல்லுக்கு வழி, நெறி, மார்க்கம் என்றும் பொருள் பெறப்படும். இவை உயர்ந்த கருத்தாகும். (வழி என்ருலும் நெறி என்ருலும் ஒன்றே.) இந்த வழி நெறி மார்க்கம் என்பன எதை அடைவதற்கு என்று சிந்திக்க வேண்டும்.

உயிர் அதாவது ஆத்மா எம்மை நடத்துகிறது. நமது உடம்பினுள்ளே உயிர் என்ற பொருள் இல்லையானுல் நமது உடல் அசையவே முடியாது. அதுமட்டுமல்லாது பிணம் எனவும் அழைக்கப்படுகின்றது. உயிர் உடம்பைக் கொண்டு நடத்துவது போல் - அந்த உயிரையும் ஒரு பொருள் இயக்க வேண்டுமே! ஆம். அந்தப் பொருள், நமது அறிவைக் கடந்தது- எண்ணத்திற்கு எட்டாதது – எவராலும் அறிய முடியாதது – தனித்தன்மை வாய்ந்தது. அதற்குப் பெயர்

தான் கடவுள். அந்தக் கடவுளை அடையும் - அறியும் வழி- நெறி என்பதுதான் சமயம்.

அப்படியானால் பல சமயங்கள் ஏன் இருக்கவேண்டும் என்ற கேள்வியொன்று எழுகின்றது. ஆம்! சமயங்கள் பலவேதான். ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்தை அடையவேண்டுமானால் பல மார்க்கங்களால் அவ்விடத்தை அடையலாம் என்பது சாதாரண நிகழ்ச்சி. நதிகள் - ஆறுகள் என்பன பல்வேறு இடங்களிலிருந்து உற்பத்தியானாலும் கடலிலேதான் சங்கமிக்கின்றன. இதேபோல சமயங்கள் பலவாறானாலும் அவை யாவும் இறைவனாகிய அந்தப் பரம்பொருளை அடையவே முனைந்து நிற்கின்றன. இந்த வகையில் சைவர்கள் சிவனையும் கிறிஸ்தவர்கள் யேசுவையும், முஸ்லிம்கள் முகம்மது நபியையும், பௌத்தர்கள் புத்தரையும் வணங்குகிறார்கள். எல்லா மதத்தினரும் கடவுள் ஒருவர்தான் என்று கூறுகிறார்கள். ஆனால் வழிபடும் முறைகளில்தான் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக சிவனொளிபாத மலைக்கு எல்லாச் சமயத்தவர்களும் செல்கின்றார்கள். தத்தம் மதக் கோட்பாடுகளுக்கு அமைந்தாற்போல் வழிபாடு நடத்துகிறார்கள்.

> "என் செயலால் ஆவது யாதொன்றுமில்லை
> இனித் தெய்வமே"

என்று சைவ சமயத்தவர்கள் வணங்குகிறார்கள்.

> "எல்லாம் யேசுவே
> எனக் கெல்லாம் யேசுவே
> தொல்லை மிகும் இவ்வுலகில் — யேசுவே"

என்று கிறிஸ்தவர்கள் துதிக்கின்றார்கள்.

> "அல்லா ஹு அக்பர்
> முகம்மது ரசூலுல்லா ஹி"

என்று இஸ்லாமியரும் வழிபடுகிறார்கள்.

> "புத்தம் சரணம் கச்சாமே"

என்று பௌத்தர்களும் போற்றுகிறார்கள்"

ஆகவே எது எப்படியிருப்பினும் எல்லா மதத்தவர்களும் வெவ்வேறு வழிகளினின்றும் ஒரே இறைவனையே வேண்டுதல் செய்கின்றார்கள்.

மேலும் சமயங்கள் மக்களின் வாழ்வை வழிப்படுத்துகின்றன. சமயத்தோடு இயைந்த வாழ்வே நல்வாழ்வு. எல்லா மதத்தினருக்கும் பொதுவான நீதி ஒழுக்கம் என்பவற்றை சில நூல்கள் கூறுவதைக் காணுகின்றோம்.

> "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப் படும்"

என்ற வள்ளுவரின் வாக்கு பொதுவான கருத்தையே கூறுகின்றது. ஆசாரக் கோவை இனியவை நாற்பது என்ற பழம் பெரும் நூல்களில் சமய வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கப்படுகின்றது.

> "வாழ்த்த வாயும்,
> நினைக்க மடநெஞ்சும்
> தாழ்த்த சென்னியும் தந்த தலைவன்"

என்ற கருத்துக்கள் எல்லாச் சமயத்தவர்களையும் ஒன்றிணைக்கிறது. இதுசர்வ மதமும் சமன் என உறுதியளிக்கிறது.

> "வாயே வாழ்த்து ........"
> "நெஞ்சேநீ நினையாய் ....... "
> "தலையே நீவணங்காய் ......."

என்று சைவ சமயகுரவர்கள் கூறிப் போந்தார்கள்.

> "பணியாயோ சிரசே ..... "
> "யேசுவையே துதிசெய் மனமே .. "
> "நெஞ்சமே நீ அநுதினமும் நின்மலனை"

எனக் கிறிஸ்தவ நூல்களும் கூறுகின்றன.

"ஆதியை வணங்காச் சிரம் வீண் சிரம்,,
அன்னவனைக் கருதாமனம் வீண் மனம்
சோதி நல்(ன்) நபிமேல் சலவாத்தினை
சொல்லியே புகழாத வாய் வீண்வாய்
ஓதுமாகம நீதி கேட்டு
உணர்ந்திடாச் செவி வீண் செவி,,

என இஸ்லாமிய ஆசாரக் கோவையும் கூறுகிறது, இதிலிருந்தும் எல்லா மதங்களும் ஒரே நெறியினையே போதிக்கின்றன என்பது உண்மையாகும்.

வேறு படுஞ்சமய மெல்லாம்
புகுந்து பார்க்கின்
விளங்கு பரம் பொருளே
நின் விளையாட்டால்,
மாறுபடும் கருத்தில்லை, முடிவில்
போன வாருதியில்
நதித்திரள் போல் வயங்கிற்றம்மா

என்பதும் தாயுமானவர் பாடல்.

நாம் இன்னும் நுணுகி ஆராய்ந்தால் எல்லாச் சமயங்களும் அன்பு, ஜீவகாருண்யம், தன்னுயிர்போல் மன்னுயிரையும் நேசித்தல் சமத்துவம் சகோதரத்துவம் போன்ற பண்புகளை வலியுறுத்திக் கூறுகின்றன.

---


NEW AMATEUR ACADAMY
NELLIADY, — KARAVEDDY,

கலை, விஞ்ஞான வகுப்புகளுக்கு
அனுபவமும், திறமையும் மிக்க
பட்டதாரி ஆசிரியர்களால் கல்வி போதிக்கப்படுகின்றது.

நிர்வாகி.

# சென்ற் ஜோட்ஸ் ஸ்ரோர்ஸ்

★ நம்பிக்கையும்

★ நாணயத்திற்கும்

உத்தரவாதமுள்ள தாபனம்

**வீட்டுத் தளபாடங்கள்**

**குறைந்த விலையில்**

**பெற்றுக்கொள்ளலாம்**

உரிமையாளர்:

**எம். ஸ்ரனிஸ்லோஸ்**

நெல்லியடி,

கரவெட்டி.

# NEWTONS SCIENCE HALL

KARAVEDDI.

தரத்தில் சிறந்த ஆசிரியர்களால்

**G. C. E. A/L**

**G. C. E. O/L**

**N. C. G. E. வகுப்புக்களுக்கும்**

**6ம், 7ம், 8ம்,**

**வகுப்புக்களுக்கும்**

புதிய கல்விக் கொள்கைக்கேற்ப பாடங்கள் கற்பிக்கப்படும்.

''நிர்வாகி''

நெல்லியடி,

கரவெட்டி.

# தரமான புகைப்படங்களுக்கு

**இன்றே விஜயம் செய்யுங்கள்**

# லீலா ஸ்ருடியோ

**190, பிரதான வீதி,**

**யாழ்ப்பாணம்.**

வட அல்வை

இளங்கோ சனசமூக நிலையத்தின்

தமிழ் விழாவை வாழ்த்துகின்றோம்.

கல்வி ஒரு மலை;

அதில் ஏறுவது கடினமல்ல,

ஆனல் பயிற்சி தேவை.

—சன்லைற் பொன்மொழி

---

36 வருடமாக

**தங்கள் சேவையிலிருக்கும்**

# சன்லைற் றைக்கிளீனேர்ஸ்

**SPECIALIST FOR DRY CLEANING**

ராணித்தியேட்டர் அருகாமை

பெரியகடை, — யாழ்ப்பாணம்.



# நன்றி நவில்கிறோம்



- எமது அழைப்பை ஏற்று இன்று இங்கு வருகைதந்து எமது புதிய கட்டிடத்தை திறந்து வைத்த பெரியாருக்கும்.
- எமது விழா மலருக்கு ஆசிச்செய்திகள் வழங்கிய உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் திரு. க. நல்லைநாதன் சி. ஏ. எஸ். அவர்களுக்கும்.
- பருத்தித்துறை தொகுதி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் அவர்களுக்கும்.
- அம்பாள் ச.ச. நிலையச் செயலாளர் திரு. ரி. கே. வெள்ளிமலை அவர்களுக்கும்.
- எமது அழைப்புக்கு மதிப்பளித்து இன்று இங்கு நடைபெறும் விழாவில் கலந்து கொண்ட அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்களுக்கும்.
- சிறப்பு மலருக்கு கட்டுரை, கவிதை, விளம்பரங்கள் தந்துதவிய அன்பர் களுக்கும்.
- புதிய கட்டிடம் அமைவு பெறுவதில் உதவியளித்த, கட்டைவேலி கிராம சபை முன்னாள் தலைவர் திரு. சி. மாணிக்கம் அவர்களுக்கும், தச்சுவேலையை சிரமப் பணியாகச் செய்துதவிய இளகாமம் திரு. சி. க. இரத்தினம் அவர் களுக்கும்.
- எமது கட்டிடத்தைக் கூடியளவு சிரமதானப் பணிகள் மூலம் நிறைவேற்றிய மன்ற இளைஞர்களுக்கும்.
- வேண்டிய போது பண உதவிகள் செய்த எமது அங்கத்தவர்களுக்கும்.
- அழகுற அரங்கமைத்துத் தந்தவர்களுக்கும்.
- ஒளி, ஒலி அமைப்பாளர்களுக்கும்.
- விழாவினைக் கண்டுகளித்து எம்மையும், களிப்பில் ஆழ்த்திய அன்பர்களுக்கும்.
- இம்மலரினை அழகுற அச்சிட்டு உதவிய திருவள்ளுவர் அச்சகத்தாருக்கும்.
- மேலும் நாம் குறிப்பிட மறந்த ஏனையோருக்கும், எமது உளம் கனிந்த நன்றி உரித்தாகட்டும்.

**விழாக்குழு.**

**'ராஜன்ஸ் ஆட்ஸ்'ன்**
நல்வாழ்த்துக்கள்

- ★ கட்டுரை
- ★ சிறுகதை
- ★ நாவல் புத்தகங்களின் அட்டைச் சித்திரங்கள்

மற்றும்
வாழ்த்துமடல்கள் வரைவதற்குச்
சிறந்த இடம்

N. V. இரத்தினராஜ்
"ராஜன் ஆட்ஸ்"
136/10, மலே வீதி,
கொழும்பு—2.

எங்களிடம்
உங்களுக்குத் தேவையான
சகலவிதமான

- ★ செருப்பு
- ★ சப்பாத்து
- ★ பாட்டா

வகைகளும்
நிதான விலைக்குப்
பெற்றுக்கொள்ளலாம்.
இன்றே விஜயம் செய்யுங்கள்

**மல்லிகாஸ்**
வெள்ளவத்தை.

**குணம்ஸ்**
**மோட்டோர்**
**எலக்ட்ரிக்கல் வேக்ஸ்**

மோட்டர், டைனமோ, கட்டவுட்,
கோண், வயறிங்,
ஆமைச்சர் றிவைன்டிங்,
பற்றிசாச், முதலியன
செய்து கொடுப்பவர்கள்.

மத்திய மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

**மொடேன் எடிக்கேசன் சென்றர்**

**MODERN EDUCATION CENTRE**
NELLIYADI, — KARAVEDDI.

6ம், 7ம், 8ம்,
வகுப்புக்களுக்கு
புதிய கல்வித் திட்டத்திற்கு
அமைய பாடங்கள்
கற்பிக்கப்படும்.

பருத்தித்துறை - புலோலி

# தெங்கு பனம்பொருள் உற்பத்தி

# விற்பனவுச் சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

பதிவு இல:51600 — 11-3-72.



எங்களிடம்

தரத்தில் சிறந்த தூய்மையான

## பனை வெல்லம்

கிடைக்கும்.

**விற்பனை நிலையங்கள்:-**

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மந்திகை

RRI

# RAPID RESULTS INSTITUTE

**Special Invitation for all Accountancy Students.**

- ★ To sit your Exams with absolute Confidence.
- ★ To Pass your Exams first time

## VISIT OUR

**FORTNIGHT PRE-EXAMINATION SEMINAR**
**MAY. 75 EXAMS.**

Venue: Hindu Ladies College, Wellawatte.
for further Details: Our Students Awarden
The world Prizes: in the Last Exams.

I. Mr. Pendigrast (Part I world Prize)

I. Mr. Ranjan (Financial Accountancy)

III. Mr. Ghouse (Bus. Mathematics & Statistics)

V. Karuuanithy
Director of Studies.

---

இம் மலர் வட அல்வை இளங்கோ ச. ச. நிலையத்திற்காக நிலையச் செயலாளர் வே. வேதநாயகம் அவர்களால் நல்லூர் திருவள்ளுவர் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
21-6-75